# எறும்பும் புறாவும்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# எறும்பும் புறாவும்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# எறும்பும் புறாவும்





ஒரு நதிக்கரையின் அருகில் எறும்பு ஒன்று சென்று கொண்டிருந்தது. அப்பொழுது திடீரென காற்று வேகமாக வீசியது. இதனால் எறும்பு ஓடும் நீரில் விழுந்து விட்டது. உடனே எறும்பு உதவிக்காக அலறியது. “யாராவது எனக்கு உதவி செய்யுங்கள்”, “என்னைக் காப்பாற்றுங்கள்” என்று கத்தியது. மரத்தில் இருந்த புறா எறும்பின் நிலை கண்டு வருந்தியது.



உடனே ஒரு இலையைப் பறித்து ஓடும் நீரில் போட்டது. எறும்பு இலையின் மீது ஏறி கரைக்கு வந்தது. எறும்பு தப்பித்ததை எண்ணி புறா மகிழ்ச்சி அடைந்தது. சில நாட்கள் சென்றன. வேடன் ஒருவன் வேட்டையாட காட்டிற்கு வந்தான். மரத்தின் மீது இருந்த புறாவைப் பார்த்தான். உடனே புறாவை வேட்டையாட எண்ணி வில்லில் அம்பைத் தொடுத்துக் குறி வைத்தான்.



இவற்றை பார்த்த எறும்பு புறாவைக் காப்பாற்ற ஊர்ந்து சென்று அவனது காலை பலமாகக் கடித்தது. வலியினால் வேடனின் குறி தவறியது. புறா தப்பித்து வானில் பறந்தது. புறா எறும்பிற்கு நன்றி கூறியது. பின் இருவரும் நல்ல நண்பர்கள் ஆனார்கள்.



# கதையின் நீதி

ஒரு நல்ல செயல் மற்றொரு நல்ல செயலுக்கு வழிவகுக்கும்.


ஒரு நல்ல செயல் மற்றொரு நல்ல
செயலுக்கு வழி வகுக்கும்.